வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – சரவணகுமார்

தேதி 03.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிக்கும் 2024ஆம் ஆண்டிற்கான தேசிய விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வழங்கினார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 புதிய குற்றவியல் சட்டங்களின் வெற்றிகரமான அமலாக்கத்தை இன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.
- எதிர்கட்சிகளின் வெளிநடப்புகளுக்கு இடையே நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் அலுவல்களும் இன்று வழக்கம் போல் செயல்பட்டன.
- நாடு முழுவதும் 1 லட்சத்து 73 ஆயிரம் ஆயுஷ்மான் ஆரோக்கிய மருத்துவமனைகள் நிறுவப் பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. நட்டா தெரிவித்துள்ளார்.
- காரைக்கால் மாவட்டத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசல் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது.

---

<u>*திரௌபதி முர்மு (12)*</u>

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று புதுடெல்லியில், 2024ஆம் ஆண்டிற்கான மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிக்கும் தேசிய விருதுகளை 33 தனி நபர்கள், மற்றும், நிறுவனங்களுக்கு, வழங்கி சிறப்பித்தார்.

விழாவில் பேசிய குடியரசுத் தலைவர், இன்றைய விருதாளர்கள் சமுதாயத்தின் எடுத்துக்காட்டாக திகழ்வதாக, புகழாரம் சூட்டினார்.

மாற்றுத்திறனாளிகளை தொழில் முனைவோராக ஊக்கப்படுத்தி வேலை வாய்ப்பு வழங்குதல், அவர்களின் திறன்களை மேம்படுத்துதல், அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களை வாங்குவதற்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் அவர்களின் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குவது உள்ளிட்டவை மாற்றுத்திறனாளிகளின் தலைமைப் பண்பை மேம்படுத்த உறுதுணையாக இருக்கும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

---------------------------------

*குற்றவியல் சட்டம்-பிரதமர்* (13)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மாற்றி அமைக்கப்பட்ட 3 புதிய குற்றவியல் சட்டங்களின் வெற்றிகரமான அமலாக்கத்தை இன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

பாரதீய நியாய சன்ஹிதா, பாரதீய நாகரிக் சுரக்க்ஷா சன்ஹிதா, மற்றும், பாரதீய ஷாக்க்ஷிய அதிநியம் ஆகிய 3 புதிய குற்றவியல் சட்டங்கள் நாடு முழுவதும் கடந்த ஜூலை மாதம் 1ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது. இன்றைய சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ப, நாட்டின், சட்ட அமைப்பை கூடுதல் வெளிப்படையாக்கும் உத்தேசத்துடனும், ஆற்றல் மிக்கதாகவும் மாற்றும் வகையில் இந்த புதிய சட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இன்று சண்டிகரில் நடைபெறும் “பாதுகாப்பான சமுதாயம், முன்னேறிய இந்தியா: தண்டனையில் இருந்து நீதி” என்ற கருப்பொருள் அடிப்படையிலான நிகழ்ச்சி ஒன்றில் பிரதமர் திரு. நரேந்தீர மோடி இந்த சட்டங்களின் வெற்றிகரமான அமலாக்கத்தை நாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளார்.

---------------------------------

நாடாளுமன்றம் 1 (17)

கடந்த 5 தினங்களாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் அலுவல்களும் நடைபெறாமல் ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், இன்று வழக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய அரசுக்கு எதிராக எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வந்த நிலையில், இன்று மக்களவை மற்றும் மாநிலங்களவையின் கேள்வி நேரம் மற்றும் பூஜ்ய நேரத்தில், முக்கியத்துவம் வாய்ந்த விவாதங்கள் இடம்பெற்றன.

இருப்பினும், உத்தரபிரதேச மாநிலம் சம்பல் வன்முறை தொடர்பான விவாதங்கள் இன்று, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிரொலித்தன. மாநிலங்களவையில் பூஜ்ய நேரத்தின் போது சமாஜ்வாதி கட்சியின் உறுப்பினர் திரு. ராம்கோபால் யாதவ், சம்பல் வன்முறை திட்டமிட்ட சதி செயல் என்றும், இந்த வன்முறையில் தொடர்புடைய உத்தரபிரதேச மாநில காவல் துறை மற்றும் நிர்வாக அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், இந்த வன்முறையில் 5 பேர் உயிரிழந்ததாகவும், 20 பேர் காயமடைந்ததாகவும் குறிப்பிட்டார். இந்த சம்பவம் குறித்து விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தி சமாஜ்வாதி மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

நாடாளுமன்றம் 2 (10)

இதே பிரச்சனை மற்றும் தொழில் நிறுவனம் ஒன்றின் மேல் சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி, மக்களவையிலும் எதிர்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டு, பின்னர் வெளிநடப்பு செய்தனர். இன்று காலை அவை கூடியதும், எதிர்கட்சி உறுப்பினர்களின் இத்தகைய கோரிக்கைகளுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. பூஜ்ய நேரத்தின் போது, கோரிக்கைகளை வலியுறுத்துமாறு மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா அவர்களிடம் கேட்டுக் கொண்டார். காங்கிரஸ், சமாஜ்வாதி,

திமுக உள்ளிட்ட எதிர்கட்சியினர் இதனை ஏற்காமல் அமளியில் ஈடுபட்டு பின்னர் வெளிநடப்பு செய்தனர்.

----------------------------------

*<u>நாடாளுமன்றம்-எதிர்கட்சி</u>* <u>(16)</u>

தொழில் நிறுவனம் ஒன்றின் மேல் சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என, இண்டியா கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், இன்று, நாடாளுமன்ற வளாகத்தில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி, ஆம் ஆத்மி கட்சியின் திரு. சஞ்சய் சிங், புரட்சிகர சோஷியலிச கட்சியின் திரு. என்.கே. பிரேமசந்திரன், ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சியின் மிசா பார்தி உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர். பிரதமர் மோடி தலைமையிலான அரசின் விவசாயிகளுக்கு எதிரான கொள்கைகள் மற்றும் முதலாளித்துவ ஆதரவு கொள்கைகளை எதிர்ப்பதாக, போராட்டத்தின் போது காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினர் திரு. சசிதரூர் குறிப்பிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சமாஜ்வாடி கட்சியின் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், குளிர்காலக் கூட்டத் தொடர் துவங்கிய நாள் முதல், உத்தரபிரதேச மாநிலம் சம்பல் வன்முறை தொடர்பாக கேள்வி எழுப்பி வருவதாகவும், அவையில், இதுகுறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

----------------------------------

*<u>நட்டா</u>* <u>(14)</u>

நாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை வலுப்படுத்த, மத்திய அரசு தொடர்ந்து பாடுபட்டு வருவதாக, மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி நட்டா தெரிவித்துள்ளார். இன்று மாநிலங்களவையில், கேள்வி நேரத்தின் போது, துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அமைச்சர், சுமார் 1 லட்சத்து 73 ஆயிரம் ஆயுஷ்மான் ஆரோக்கிய மருத்துவமனைகள் நாடு

முழுவதும் நிறுவப் பட்டுள்ளதாக தெரிவித்தார். 30 வயதிற்கு முன்னரே பல் மருத்துவம், மனநலம், நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், புற்றுநோய் உள்ளிட்ட நோய்களை கண்டறிந்து தீர்வுகாணும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். தொலைபேசி மூலம் சிகிச்சை அளிக்கும் தேசிய tele Mental சுகாதார நிகழ்வுகள் மேற்கொள்ளப் படுவதாகவும், 53 tele-MANAS மையங்கள் மூலம் மனநல உதவிகள் வழங்கப்படுவதாகவும் திரு. நட்டா தெரிவித்தார். இத்தகைய உதவிகள் மற்றும் ஆலோசனைகள் 20 பிராந்திய மொழிகளில் அளிக்கப்படுவதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

---------------------------------

முர்மு-ஒடிசா 1 (14)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, 5 நாள் பயணமாக இன்று ஒடிசா மாநிலம் செல்கிறார். தமது பயணத்தின் போது, இன்று புவனேஷ்வரில் நிறுவப்பட்டுள்ள பண்டிட் ரகுநாத் முர்முவின் புதிய சிலையை திறந்து வைப்பதுடன், ஆதிம் ஓவர் ஜர்ப்பா ஜாஹர் வழிபாட்டு தலத்திற்கும் செல்ல உள்ளார்.

நாளை, புரி நகரில் ஸ்ரீஜெகன்நாதர் கோவிலில் வழிபடும் அவர், கோபபந்து ஆயுர்வேத மஹாவித்யாலயாவின் 75ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்கிறார். பின்னர், புரி Blue Flag கடற்கரையில் கடற்படை தின கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு, சாகச நிகழ்ச்சிகளை பார்வையிடுகிறார்.

நாளை மறுநாள் 5ஆம் தேதி, புவனேஷ்வரில் உள்ள ஒடிசா வேளாண் மற்றும் தொழில்நுட்ப பல்கலையின் 40ஆவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதுடன், புதிதாக கட்டப்பட்டுள்ள நீதிமன்ற வளாக கட்டடங்களையும் திறந்து வைக்க உள்ளார்.

வரும் 6ஆம் தேதி, ராய்ரங்பூர் மஹிளா மஹா வித்யாலயாவின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடும் திருமதி முர்மு,

முர்மு-ஒடிசா 2 (5)

**7ஆம் தேதி, பாங்கிரி போஸி-கோருமஹிசனி உள்ளிட்ட ரயில் தடங்கள், பழங்குடியின ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், தந்த்போஸ் விமான நிலையம், ராய்ரங்பூர் துணை வட்டார மருத்துவமனை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், வேறு பல திட்டங்களை தொடக்கி வைக்கவும் உள்ளார்.**

---------------------------------

பிரதமர்-ஸ்டாலின் (6)

**தமிழ்நாட்டில், அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் கனமழை காரணமாக, மாநிலத்தில் நிலவும் சூழ்நிலைக் குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினுடன், தொலைபேசியில் கலந்துரையாடினார். உரையாடலின் போது, மாநிலத்திற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று, பிரதமர் கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

---------------------------------

பிரதமர்-ராஜேந்திர பிரசாத் (9)

**நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா அமரர் டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் பிறந்த தினமான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். அரசியல் நிர்ணய சபையின் தலைவராக செயல்பட்ட டாக்டர் ராஜேந்திர பிரசாத், இந்திய ஜனநாயகத்திற்கு வலுவான அடித்தளம் அமைக்க சிறந்த பங்களிப்பை அளித்துள்ளதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் குறிப்பிட்டுள்ள பிரதமர், இன்று நாம் அரசியல் அமைப்பு சட்டத்தின் 75ஆவது ஆண்டை கொண்டாடும் வேளையில், அன்னாரது வாழ்க்கையும், கொள்கைகளும் நம் அனைவருக்கும் மேலும் உத்வேகம் அளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.**

---------------------------------

குவைத்-அப்துல்லா (5)

குவைத் நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு. அப்துல்லா அலி அல்-யஹியா, 2 நாள் அரசுமுறை பயணமாக இன்றிரவு இந்தியா வருகிறார். பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்திக்கும் திரு. அப்துல்லா, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருடன் இருதரப்பு உறவுகள் குறித்த கூட்டம் ஒன்றிலும் பங்கேற்க உள்ளார்.

---------------------------------

*காரைக்கால் 1 (17)*

காரைக்கால் மாவட்டத்தில், அண்மையில் பெய்த கனமழை மற்றும் புயல் காரணமாக, நெடுங்காடு மற்றும் திருநள்ளாறு தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில், குடிசை வீடுகள் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட குடியிருப்பு வாசிகளுக்கு தார்பாய்கள், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் வழங்கப்பட்டன. மாவட்ட ஆட்சியர் டாக்டர் மணிகண்டன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் செயலர் திரு. பொன். பாஸ்கர், அலுவலக கண்காணிப்பாளர் பாலு என்கிற பக்கிரிசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, மாவட்டத்தில் நிலவும் வாகன பெருக்கம் மற்றும் போக்குவரத்து நெரிசல் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் டாக்டர் மணிகண்டன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் லட்சுமி சவுஜன்யா, பொதுப் பணித் துறை கண்காணிப்பு பொறியாளர் திரு. சந்திர சேகரன், சாலைகள் மற்றும் கட்டடங்கள் பிரிவு நிர்வாக பொறியாளர் திரு. சிதம்பரநாதன், தெற்கு காவல் கண்காணிப்பாளர் திரு. சுப்ரமணியன், நகராட்சி செயற்பொறியாளர் திரு. லோகநாதன், மின்துறை

*காரைக்கால்* 2 (9)

செயற்பொறியாளர், போக்குவரத்து காவலர்கள் மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஆய்வின் போது, காத்த பிள்ளை கோடி சந்திப்பு விரிவாக்கம், சாலை விரிவாக்க பணிகள், மழைநீர் வடிகால் வசதி விரிவாக்க பணிகள், கடற்கரை சாலையில் சேதமடைந்த மின் விளக்குகள் சரிசெய்யும் பணி உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு முன்னர், மாதா கோவில் வீதி சந்திப்பு, அரசு மருத்துவமனை பேருந்து நிறுத்தம், நாகை - காமராஜர் சாலை சந்திப்பு உள்ளிட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மணிகண்டன் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

----------------------------------

*ஏனாம்* (9)

ஏனாமில், மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் சார்பில், யுவ உத்ஸவம் இன்று கொண்டாடப்பட்டது. சிறுவர்கள் அரங்கத்தில் நடைபெற்ற இந்த உத்சவத்தை சட்டமன்ற உறுப்பினர் திரு. கொல்லப்பள்ளி ஸ்ரீனிவாச அசோக் இன்று காலை துவக்கி வைத்தார். அறிவியல், இளம் எழுத்தாளர்கள், இளம் ஓவியர்கள், மொபைல் ஃபோட்டோ கிராஃபி உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன. மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் புதுச்சேரி மாநிலத்திற்கான டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் கலந்து கொண்டு, பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

----------------------------------

*இஸ்ரோ* (8)

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், இஸ்ரோ, PSLV-C59/Proba 3 செயற்கைக் கோளை நாளை மாலை 4.08 மணிக்கு, ஸ்ரீஹரிகோட்டா சதீஷ்தவான் விண்வெளி மையத்தில் இருந்து, விண்ணில் செலுத்த உள்ளது. இஸ்ரோவின் NEW SPACE INDIA நிறுவனம் மூலம்

வணிக ரீதியில், விண்ணில் நீள்வட்டப் பாதையில் செலுத்தப்பட உள்ள ஐரோப்பிய விண்வெளி முகமையின் இந்த செயற்கைக் கோள், சூரிய ஒலி வட்டம், அதன் சுற்றுப்புற வளிமண்டலம், விண்வெளியின் பருவநிலை மற்றும் சூரியனில் நிலவும் காற்று உள்ளிட்டவை குறித்த ஆராய்ச்சிகளில் ஈடுபடும்.

---------------------------------

ஹாக்கி (6)

ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நடைபெற்று வரும் ஆடவர் ஜூனியர் ஆசிய கோப்பைக்கான அரையிறுதி ஆட்டங்களின் ஒரு போட்டியில், நடப்பு சேம்பியன் இந்தியா, மலேசியாவை எதிர்கொள்கிறது. இந்த போட்டி, இந்திய நேரப்படி இன்றிரவு 8.30 மணிக்கு துவங்கும். மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் மற்றும் ஜப்பான் அணிகள் மோத உள்ளன. இப்போட்டிகளுக்கான இறுதி ஆட்டம் நாளை நடைபெறும்.

---------------------------------